போலீஸ் ஆளும் கட்சிக்கு சாதகமாக இருக்கக்கூடிய நிலைமையை நாம் காண்கிறோம். இன்றைக்கு தொழிலாளர்களுக்கு என்னவெல்லாமோ செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இன்றைக்கு கோர்ட்டா ரால் கொடுக்கப்படும் தீர்ப்பை அமுல் செய்வதற்கு கமிஷனுக்கு அதிகாரம் கிடையாது. நில பிரபுக்கள் எல்லாம் போலீஸின் பலத்தை வைத்துக் கொண்டு கோர்ட் தீர்ப்பை மீறி நடக்கிறார்கள். இன்றைக்கிருக்கிற (லேபர்) தொழில் இலாகா அதிகாரிகள் சொன்னால் கூட கேட்க முடியாத நிலைமை யில் இருந்துகொண்டிருக்கிறார்கள். சட்ட ரீதியாக அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் உரிமைகளைக் கேட்கும்போது, அந்த சந்தர்ப்பங்களில் போலீஸ் சட்டத்தை மீறுகின்றவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. இதனால் அவர் கள் சட்டத்தை மீறி கோர்ட்டு தீர்ப்பு அமுல் நடத்தப்படாமல் இருப்பதை நாம் காண்கிறோம். குறிப்பாகப் பார்த்தால் சமீபத்தில் அகில இந்திய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கையின்படி தொழிலாளர் களுக்கு 25 சதவிகித'ப் போனஸ் கொடுக்கவேண்டுமென்று கேரளா ராஜ்யத்தில் சட்டத்தைத் திருத்தி வைத்திருக்கிறார்கள். அங்கே கோர்டு தீர்ப்புகளெல் லாம் உடனே அமுல் செய்யப்பட்டுவருகிறது. நமது மந்திரி கனம் ஸ்ரீ பக்தவத்சலம் கூட கோர்டு தீர்ப்புகளை உடனடியாக அமுல் செய்ய நடவடிக் கைகள் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் முதலா ளிகள் கோர்டு தீர்ப்புகளை ஒப்புக்கொள்வதில்லை. காரணம் இங்குள்ள முதலாளிகளுக்கு போலீஸின் உதவி கிடைக்கிறது. அங்கு கேரளாவில் போலீஸின் உதவியை முதலாளிகளுக்கு கொடுப்பதில்லை. ஆகவே பாமர மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேறுகின்றன. ஆனால் இங்கு இன்றைக்கு பாமர மக்கள், தொழிலாளர்கள் எடுத்துச் சொல்லுகிற கோரிக்கைகளுக்கு சரியான நியாயம் கிடைப்பதில்லை என்பதை நாம் பார்க்கிறோம்.

இது இப்படியிருக்க, எஸ். ஏ. பி. போலீஸை எடுத்துக்கொண்டால், அவர்களுக்கு ஒரு ஹெட் க்வார்ட்டர்ஸ் இருக்கிறது. அங்கே அவர்களை நிரந்தரமாக வைப்பதில்லை. அடிக்கடி, இரண்டு மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை அவர்களை பல இடங்களுக்கு மாற்றி விடுகிறார்கள். அப்படி மாற்றக் கூடிய நிலையிலே 1945 ஏப்ரல் மாதம் வரையிலே அவர்களுக்கு சாப்பாடிற்காக வேண்டி 18 ரூபாய்தான் கொடுக்கப்பட்டு வந்தது. அப்படிக் கொடுத்து வந்ததை, அதற்குப் பிறகு இதுவரையில் 18 ரூபாய் வெளியில் போனால் கொடுத்துவிட்டு 31 பஞ்சப்படியில் பாதியை பிடித்துக்கொடுக்கப் படுகிறது. இதுபோன்ற நிலைமையை மாற்ற வேண்டுமென்று அவர்கள் நீண்ட நாட்களாக கேட்டுக்கொண்டு வருவதாக சமீபகாலத்தில் அவர்கள் கோரிக்கைகளை பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்தப் பத்திரிகையில் வந்தது என்று சொல்ல முடியுமா ?

SRI V. K. KOTHANDARAMAN : எந்தப் பத்திரிகை என்பதை நாளை சொல்கிறேன். ஆவடியில் இருக்கக் கூடிய "டி" கம்பெனி, எஸ்.ஏ.பி. போலீஸ்காரர்கள் இருக்கிற "டி" கம்பனி என்ற கம்பனி இருக்கிறது. அதை பார்வையிட கனம் அமைச்சரவர்கள் அங்கு போயிருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அவர்களது குறைகளை நேரில் கண்டு பேச சந்தர்ப்பம் கொடுக்காத முறையிலே அவர்களை எல்லாம் ஒரு அறையில் அடைத்து வைத்துவிட்டார்கள். அதையெல்லாம் பார்த்துவிட்டு மந்திரி வரக்கூடிய சந்தர்ப்பத்தில் அங்கு சாப்பாடு செய்யக்கூடிய ஒரு "குக்" அதை மீறி அமைச்சர் அவர்களிடம் தங்களது குறைகளைச் சொன்னபோது அமைச்சரவர் கள், அதைப் பற்றிக் கவனிக்கிறேன், என்று சொன்னார்கள். அது வரவேற் கத் தக்க விஷயமே. அமைச்சர் அவர்கள் அங்கிருந்து திரும்பிய பிறகு அந்த அதிகாரி அவரைக் கூப்பிட்டு 24 மணி நேரம், தனி ஒரு ரூமில் வைத்தார்கள், அதாவது "கன்பைன்மென்"டில் வைத்தார்கள். இப்படி மந்திரி அவர்களிடம் அவர்களது குறைகளை பற்றிச் சொல்ல முயன் றால் அதற்கு தண்டனை என்றால் மந்திரிகளிடம் தங்கள் குறைகளைச் சொல்ல வோ அல்லது எழுத்து மூலம் தங்கள் குறைகளை சர்க்காருக்கு தெரியப் படுத்தவோ முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. அப்படிச் செய்தால்